உ

முருகன் துணை.

---

ஸ்ரீ பாலசுப்பிரமண்யர்மீது

புதிய பார்வி பக்தி

# நவரசக் கீர்த்தனை.

(முதற்பாகம்.)

---

இஃது
தூத்துக்குடியைச் சேர்ந்த மீளவிட்டான் கிராமம்
P. பொன்னையா நாடாரவர்கள் குமாரரும்
மகா-ள-ள-ஸ்ரீ கவிராயர்
அம்மமுத்து நாடார் அவர்கள்
பிரதம சிடரும்
டிராமாக்கம்பேனி உபாத்தியாயருமாகிய

**பி. ஸி. பாண்டிய தாஸ் அவர்களால்**

இயற்றியதை
ஷை கிராமம், மகா-ள-ள-ஸ்ரீ கனம்,
இராமஸ்வாமி பிள்ளை அவர்களின்
பொருளுதவியால்

தூத்துக்குடி
...லாயுதம் பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

அணா 4

26 APR 1922
MADRAS
26:417
N22
183532

உ

முருகன் துணை.

ஸ்ரீ பாலசுப்பிரமண்யர்மீது

புதிய பார்ஸி பக்தி

# நவரசக் கீர்த்தனை.

(முதற்பாகம்.)

இஃது

தூத்துக்குடியைச் சேர்ந்த மீளவிட்டான் கிராமம்

P. பொன்னையா நாடாரவர்கள் குமாரரும்

மகா-ள-ள-ஸ்ரீ கவிராயர்

அம்மமுத்து நாடார் அவர்கள்

பிரதம சீடரும்

டிராமாக்கம்பேனி உபாத்தியாயருமாகிய

P. M. பாண்டிய தாஸ் அவர்களால்

இயற்றியதை

ஷை கிராமம், மகா-ள-ள-ஸ்ரீ சனம்.

இராமஸ்வாமி பிள்ளை அவர்களின்

பொருளுதவியால்

தூத்துக்குடி

வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை அணா 4

26 APR 1922

1949

ஸ்ரீமான் கவிராயர்

அம்மமுத்து நாடாராலியற்றிய

# சாற்றுக் கவி.

---

தேமணக்கு மலர்க்கடப்பத் தாரான்மீ தின்புரமே
செழிப்புத்தோன்ற
பூமணக்கும் படியாக பாண்டியனன்கீர்த்தனையாய்
புனைதல்செய்த
பாமணக்கும் நவரசமார்ப் பாக்களிலோர் பதமேனும்
பரிந்துசொல்வோர்
நாமணக்குமென்றுக்கால் அதன்பெருமை எவராலும்
நவிலற் பாற்றே

(026:447)
123

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183532
சென்னை-600 008



ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி.

உ

சிவசுப்ரமணியக் கடவுள் துணை.

## திருச்செந்தூர் பாலசுப்ரமண்யர் மீது

புதிய பார்ஸ் பக்தி

# நவரச கீர்த்தனை.

விநாயகர் ஸ்துதி

வெண்பா

சலாபமயில்வா கனக்கட வுளின்மீத
கலா தவுளத்தடியேன் கைகுவித்து—சலாபநவ
ரசமிகுந்தகீற்தனையை நானிலத்தில்யாணியம்ப
கசமுகவன் பொற்சரணங் காப்பு.

உமாபதிதனயனே——என்றபெட்டு
மயேஸ்பரிதனயனே——வர
மருள்வா கஜமா முகனே

அனுபல்லவி

தயாபரா ஐயங்கரா ததியருளோக்தா
தாதாவல்லபை சமேதா வேத நாத (மயே)

சரணம்

தய புரியவரு
வய ஐங்கரசின்
மய வடிவேஇரு
தய மதிலேவரும்

பயமதை யகற்றியே பரிவுடன் காரும்
பாலகணபதி இவ்வேளையில்வாரும் (மயே)

வேதா விரிந்தமரை
பாதா விமலாயின்னும்
வாதா வெருப்பதென்ன
சூதா விழங்குஞ்செந்தூர்

நாதன்கீர்த்தனை பாடிடத்துணிந்தேன்
நயந்துஉனதுதிருத் தாளையும்பணிந்தேன் (மயே)

போதா புத்திரயெனக்கு
தாதா புகலுமரை
நீதா புலவர்புகழ்
நாதா புவியில்நல்ல

கீதம்பாடவிக் னேஸ்பரவாசா
கிருபைபுரி பாண்டியதாஸ்பணியீசா (மயே) 1

## சரசுபதிதுதி

பண்டாரத்தண்டாயுத—என்றமெட்டு

### பல்லவி

தண்டாமரையின் சேயே—தாயே
தவா நீயே
தத்துவஞான தவளபூசணி
புத்தகபாணி புவனக்ராணி (தண்)

### அனுபல்லவி

மண்டலமீரேழும்பணி மாமரைவேதாந்தமணி
தொண்டற்கருள் செய்வேணி
சுத்தசைதன்ய நித்தியகல்யாணி (தண்)

தொகையறு

சண்டாளமாயப் ரபஞ்சத்திலேநல
சன்மார்கனென்றபேரை
கொண்டாடவேயருள் தந்தாளவாநாவில்
குடிகொண்டஜெகசோதியே

பாட்டு

கண்டுசற்கரைநிகர் கவிச்சொல்லம்ம முத்திரு
காலடிபணிபாலன்பாண்டியன்
மேலன்பொடு பெக்காலுந்தயைசெய் (தண்) 2

## விஷ்ட்ணுதுதி

இன்னம்வர்மமேனையா—என்றமெட்டு

கண்ணபிரானே உன்னை
நண்ணினேன்பாருமய்யா—நண்ணினேன்பாரும்
பண்ணவர்பணிந்திடும் பகவானேவாரும் (கண்)

மண்ணை யழுந்தயெங்கள்
மாயாவுதாரு ரெங்க—மாயாவுதாரு
அண்ணலேஉனதருள் அடியாற்குத்தாரும் (௪)

கிருபையுருமுருகன்
கீற்தனம்பாடநல்ல கீற்தனம்பாட
தருவாயருளுனையே தனையன்கொண்டாட (௧)

வருவாய்என்வாக்கில்நிதம்
வாமனரூபாயெங்கள் வாமனரூபா
சிறுவன்பாண்டியன்பணி
செயபரந்தாமா (கண்) 3

காளிதுதி

காலப்பயிரவிசங்கரி சங்காளி—நீலி
காலப்பயிரவிசங்கரி

கோலமகுடசூர சங்காரிகுமரிவீறி
குஞ்சரிநின் செஞ்சரணம்
தா-தா-தா-தா-தா தந்தாளத்தநி
வா-வா-வா-வா-வா-வாபரங்கிரி
வாலகுருபர கோலமயில்வீர
வேலனைப்பயின்ற சூலகபாலியே (கா)

ஆலமுண்டநீலகண்டன் பாகத்திலுறும்
அம்பிகையே நம்பினேன்—கண்
பார்-பார்-பார்-பார்-பார்-பார்த்தென்கவலை
தீர்-தீர்-தீர்-தீர்-தீர்-தீர்ப்பாய்முப்புரம்
சிரித்தாற்பரித்து கரித்தோலுரித்து
எரித்துக்கரித்த விரித்தசடைச்சி (கா)

மங்களகுஞ்சரியே மாரிகிருபாகரியே
செங்கமலப்பூக்கமழும்
தாழ்-தாழ்-தாழ்-தாழ்-தாழ்-தாழ்தந்தென்குறை
கேள்-கேள்-கேள்-கேள்-கேள்-கேட்டிடத்தநி
கிருபைபுரிய வருவாயிங்கையே
திருமால்மாயன் அருமைத்தங்கையே (கா)

எங்குந்தமிழ்சிறந்து பொங்குமீள்வமாநகர்
தங்கும் அம்மமுத்தருள்நற்
பேர்-பேர்-பேர்-பேர்-பேர்-பேரையென்னாளும்
சீர்-சீர்-சீர்-சீர்-சீர்-சீர்மீதில்க்கொண்ட
சிறுவன்பாண்டியன் அருமைநற்றமிழ்
பெருகும்படியே கிருபைபுரியும் (கால) 4

## விருத்தம்

திரத்தானைபிரணவமந்திரத்தானை தெவ்வர்மனந்
திடுக்கிடச்செய்
உரத்தானைக்களபமணி உரத்தானை அடியவற்கு
உதவிசெய்யச்
சிரத்தானை மூவிரண்டு சிறத்தானை சிறந்து திகழுயில்
வேலென்னுஞ்
சரத்தானைதுலங்குபஞ் சாச்சரத்தானை அனுதினமும்
சரண்செய்வோமே

## வேறு சிந்து

கடகரி முகவனோடிலகிய செந்தூர்
கந்தான ந்தகோவிந்த கண்ணனருமை மருகா
சமூகா சலம் வாழ்
கண்யலா வண்ய முருகா—ஞானக்
கடவுளே தடவரை பொடிபட நடமயில்
கடவிய திடபுய வடிவழகா திரு
கற்தனே காருண்ய்வாசா—கயிலாசபரன்
காதில் விஞ்சை யுபதேசா (கட)

சுடர்வடி,வேலெடுத் தடரொடுவந்த
சூரபத்மனை வென்ற சுமுகா ஆனந்த பரனே
சுத்தசைதன்ய சுவாமி ஈராறுகரனே குற
சுந்தரிதன்னை நினைந்து புனந்தனில்
வந்துமறைந்து இருந்து மணந்த
சுப்பையா எப்போவருவா—புவியோர் மகிழ்ந்
தொப்ப வரமே தருவா (சுட)

மருவிலாத் திருவுருவாகிய ஞானமணியே
கடப்பமலர் வாசஞ்சிரந்தகுமாரா— அசுரர்களை
மாளச்சிதைத்தசமரா.—நல்ல
மங்களமென்றுயர் சங்கமமேருதிட
மங்கையர்செங்கரங் கூப்பிநெருங்கிட
மாதுதெய்வானையுடனே—புவிமுழுது
வலம்வந்த மயில்வாகனே (கட)

குருமுனி அருகுற பலகலையுரைசெயுங்
கோலாகலாவிண்வானோர்
குறைதவிழ்த்தாண்டகுகனே— தில்லையம்பலக்
கூத்தாடிஈன்றமகனே—யெங்கள்
குறைதீரவரமது தரவேணும் அருமுநா
அரகருமருவலர் வெருவிட அயிற்விடு
குமரு செந்தாமரைப்பாதா—பாண்டியதாஸன்
கூறுந்தமிழ்க்கருணீதா (கட) 9

தேரேநாமேமுகம்மது என்றஇந்துஸ்த்தான் மெட்டு

பல்லவி

எனக்கிந்தவேளையருள் தந்துரட்சித்திடும்
ஈசாமுத்துக்குமரு—செந்தூரு
ஈசாமுத்துக்குமரு

அனுபல்லவி

சந்தாசலாதிபரு அருணகிரிசந்தத்திருப் புகழ் கொண்டருய்
சாதிமயில்வீரு—சிங்காரா [யாரு
தையல்வள்ளிமாரு
ததிவாருய்—எனைக்காருய்
தணிகாசல மும்மையுங்குமரு (என)

செந்தாமரைபிச்சி நந்தி இருவாக்ஷி
செவ்வந்திமுல்லை சிறந்திடும்ரோசா
திகழ்கடம்பூவாசா—ப்ரகாசா
சித்தம்மகிழ்நேசா
செந்தூர்வாசா ஜெயபராசா—எனதக்ச்
சிந்தனைதீசா (என)

செம்மலைஉனைபல்லா விம்பானிலத்தினில்
தெய்வம்வேறில்லை யெனப்பலவேதங்கள்
செப்புகயில்வேலா—துணைா
சிலம்பணியுங்காலா
சிவன்பாலா ஜெகமூலா—நல்லருளைச்
செய்யுமனுகூலா (என)

மும்மாரிவரிசிக்கும் மீள்வநகரக்கவி
சிம்மமம்மமுக்து திருவடிபாரம்
சிரஞ்சூடி எந்நேரம்—நமஸ்காரம்
செய்துகவிச்சாரம்
தேவாரம் சிந்தகோரம்—பாண்டியனுன்
செப்பினேன்விஸ்தாரம் (எ) 10

துலங்குசேம்போன்—என்றமெட்டு

விழங்குதங்கக் கோபுரமின்னும்
வேதஞ்சிரந்த செந்தூர்
வேலாயுதக்கடவுளே—வள்ளிசமேதா
வேலாயுதக்கடவுளே
விடவரவணிதிருகட வுளி னருளொடு (வே)
வித்துவறத்துவிதத்தொடு
புத்திமிகுத்துஉரைத்தகவிப்புகழ் (வே)

அயனைச்சிறையிலடைத்தாயே
அசுரர்கிளையை மடித்தாயே
அரகருஎன திருதயமுருவினையற
மரகதமயில்மிசை வறவேணும்இதுததி
ஆண்டிப்பண்டாரமானவா பாண்டியதாஸன்
அரைந்ததமிழ்கருளவா (வி) 11

மீனாட்சிறமணா—என்றமெட்டு

பல்லவி

காமாக்ஷிபாலா—கழுக்குன்றார்வேலா—ஸ்ரீ

அனுபல்லவி

பூமாக்ஷிவானந்த போதனருள்க்குகந்த
புண்ணியா கனகலா
வண்ணியா தயதாச்
சண்ணியா உனைமே
நண்ணினே னருள் ஸ்ரீ (கா)

ருமானுசன மருகா ஞானசிவ முருகா
நாதா நவசங்
கீதா நறுமலர்
பாதா நம்பினேன்
நீதா வருள் ஸ்ரீ (கா)

வரந்தரும்பரன்போதா மாதுவள்ளிசமேதா
வாசா மதளாஉல்
லாசா வரமரு
ளீசா வாகும
ரேசா அருள்ஸ்ரீ (கா)

சிறந்தமுத்தமிள்வித்து தீரன்பி அம்மமுத்து
சீசன் செப்பிய
வாசன் செந்தமிழ்
ராசன் சிற்பர
தாசன் பாண்டியன் (கா) 6

என்னையாபழனிமலைவேலா—என்றமெட்டு

கந்தா கழுகுமலை வாசா—என்னைக்
கார்க்கக் கடைக்கண் பாருமீசா
கந்தக்கமழும் வள்ளிநேசா—செந்தூர்க்
கரசா விழங்குங்குமரேசா— (க)
தந்தை தாய் நீயல்லாதுவேறு—இந்த
தரணி லெனக்குதவியாரு
சந்தா சலாதி பருகூறு—இது
சமயங்கார்க்க மயிலேறு— (க)
புள்ளிக்கலபமயிற் பாகா—சத்தி
புதல்வனான கனயோகா
தள்ளிவிடாதே ஜெகமோகா—இது
கருணம் அருள்புரி விவேகா (க)
அள்ளி வெண்ணீரளிக்கஉருகா—தினால்
அடியேனுடல் மெலிந்தேன் சருகா
பள்ளிகொள்ளும் அரிமருகா—பாலன்
பாண்டியதாஸபணி முருகா— (க)

மனந்தேறுவா அம்மா அம்மணி—எ—மெட்டு

பல்லவி

ஏழைநானைய்யா—ஏது எதிவ்வாது
ஏழைநானைய்யா

அனுபல்லவி

பாளைகமழ் திருச்செந்தூரு—என்ன
பாவஞ் செய்தேன் முத்துக்குமரு—இந்த
வேளைநான் படுந்துயர்தீரு—வெற்றி
வீரமயிலேறுஞ் சிங்காரு (ஏ)

நாளை அந்தகன் வருவானே—கெஞ்சி
நயந்து கேட்டாலும் விட்டிடானே
கோளையருத்தாளுமென் கோனே—உன்னை
கும்பிட்டேன் செந்தூர் முருகோனே (ஏ)

இம்மானிலத்திலெனக்காரு—துணை
இல்லையுனை யல்லாது வேறு
சும்மாயிருக்காதே கண்பாரு—ஓம்
சுத்தசைதன்ய வாழ்வேகாரு (ஏ)

அம்ம மூத்துமாகவி ராசன்—பாதம்
அன்புடன் கொண்ட்முதல் சீசன்
செம்மலே உன்னடியார் நேசன்—தினம்
தேடுறேன் பாண்டியதாஸன் (ஏ) (8)

லாவணிமெட்டு.

கண்ணிகள்

இன்னமென்ன தாமிதம் வன்னமயில்வாகனை
ஏழைமேலென்னவாதா
இன்னமுஞ்சூதா இரங்கொணுதா—கடம்பணியும்
ஈசாசண்முகநாதா (இ)

தன்னந்தனியேவெம்பி உன்னைக்கெதியாய்நம்பி
தவிக்குறேன் பாலன்பாரு

தருணங்காரு தயவுகூரு—உனையல்லாது
தந்தைதாய் எனக்காரு (இ)
தோகைவள்ளியை யிடப்பாக மிருத்தித்திருத்
தொண்டர்க் கருளும்வேலா
சுந்தரிபாலா துலங்குசூலா—யுதம்பிடித்த
துஸ்டனிற் பரிபாலா (இ)
வாகைபுனையசுனல் வரம்பெற்ற அம்மமுத்து
மலரடிபணிசீசன்
மாகவிராசன் வனப்பிரகாசன்—பாண்டியன் பணி
வரதகுஞ்சரிநேசன் (இ) 11

ஆசிரியவிருத்தம்.

ஏழைக்கிறங்குவது வேல்முருகனல்லாது
இல்லைவேற் தெய்வமென்று
என்னாளும் நால்வேதம் முறையிடுவதென்பதை—
என்ணி நான்வந்தடைந்து
ஈராறுகையனே என்கவலைதீரென்று
இவ்வளவு நேரமட்டும்
எதிரிலேகைகட்டி யெதுரவாகச்சொல்லியும்
ஏனென்று கேளாதது
மூனைக்குமோருவித லைப்பானதோ வேற்
முகாந்திரந் தன்னையிட்டோ
முருகனே தெரியவிலை யெப்படியானாலும்
முற்றிலுங்கருணை கூர்ந்து
முறைதெரியா ஒருவனென்னை யாள்வதுன்பாரமென்—
மோதாவிலேகலந்து
மூறகநன்மார்க்கனி வனென்பதைக்கண்டு நீ
முனியாதருள் புரிகுவாய்

நாளைக்குவாவென்று சொல்லாதே என்றுயர்
நான்றாங்க மாட்டேனையா
நாதனே ஒருநிமிசம் கோடியுகமாகுதே
நானடையுங் கவலையதனால்
நாள்தோரு மென்னுடைய பூட்டாங்கமெல்லாம் நீ
நன்றாயறிந்திருந்தும்
நானுனக்கென் துயரை சொல்வதிலென்னபலன்
நளின சிங்காரசுமுகா
தாழ்வருடி அனுதின முங்கார்த்தருளு மென்றசொல்
தகாதெனனீ யெண்ணிடாதே
தமியேனும் பாண்டியதாஸ் பணிஐய்யா
சரசகோ பாலமருகா
தடமகுடசூரருடல் பொடிபடயில் வேலேவு
சரவணா நந்த குகனே
தருநிரையை மலருறையும் அழகார்ந்தசெந்தி நகர்
சண்முகத்தம்பிரானே

நித்திரையே நமஸ்காரம் என்றமெட்டு.

பல்லவி

சண்முகனே நமஸ்காரம்—இது
சமயம் அபயமென்னை ஆள்வதுன்பாரம் (ச)

அநுபல்லவி

கண்மூன்றுடையசிவகடவுளின் பாலா
கயமுகனுக்கிளையகதிர்வடிவேலா
கண்ய லாவண்ய சுப்ரமண் மாமலர்க்காலா (ச)

குன்னூர்சிக்கல் திருகுன்றமும் வேளூர்
குணங்குடி திருச்செந்தூர் கொடிமலையாரூர்
யென்னூரிலுஞ் சிரந்து இலங்கியபேரூர் (ச)

தன்னிமலை சிவஸ்தலங்கிள்ளான் வேலூர்
தௌ ரெட்டுகுடி தணிக்கழுக்குன்றூர்
எண்ணரிய போரூர் இன்னமனேகமுன்னூர் (ச)

அண்ணாமலை உன திருஅடி பணிநேசன்
அம்மமுத்து மாகவி அரசனின் சீசன்
நண்ணினோ னுனைக்காண
நண்பன் பாண்டிதாஸன் (ச) (12)

சோமசேகரன்—என்ற மெட்டில் பின்மகுடம்

சற்குருவே நற்கருணைதாரும் தாரும்-கமழ்
பொற்பதக் கெதியிலெனைச் சேருஞ்சேரும்-என்னோ
டுற்பவ வினையகலப்பாரும் பாரும்.
சிற்பர ஜெகஜோதியே மய
கற்பூர ஒளிவாகிய செய (ச)

கன்னிகுற வள்ளியற்காயன்று யன்று-கானில்
குன்னக்கிழவடிவதாகச் சென்று சென்று-அந்த
அன்னநடைமாதெதிரில் நின்று நின்று
பின்னமுறப் பலவாதுகள் பேசியே
நன்மையுர மணஞ்செய் பரதேசியே (ச)

காவடி கொண்டுன்னடியைத் தேடி தேடி-வரும்
மாவடியார் கூட்டம் பல கோடா கோடி-நின்
சேவடியைக் காணக்கவி பாடி பாடி
நாவுமுலருதே வரந்தர
தேவா வாவா பூநிரந்தர (ச)

கம்பரைப்போல் கவியுரைக்கும் நேசன் வாசன்-நிதம்
நம்பும் அம்மமுத்தருளும் ஈசன் ஈசன்-செந்தூர்
செம்மலடி பணியும் பாண்டிய தாஸன் தாஸன்
இம்மானிலத்தில் யாவருந்துதி
நன்மையே பெருமா திருப்பதி (ச) (13)

யெப்போதானிரங்குமோ—என்ற மெட்டு

பல்லவி

செந்தூர்க்குமரு உந்தாள்
வந்தாளிது சமயம்.

அநுபல்லவி

அந்தோ துயரால் நொந்து
வந்தேன் கந்தா மெலிந்து
அய்யனே மெய்யனே
ஆருமாமுகத்துய்யனே (செ)

தந்தைக்குபதேசித்த
சாமியுன்மேல்க் கீற்தனே
சாற்றினேன் போற்றினேன்
தாதாநின்தயவய்யனே (செ)

உன்னையல்லாது தந்தை
உண்டோ இதென்ன விந்தை
ஓதுவாய் நாதனே
உன்னை நம்பினேன் வேதனே (செ)

அன்னை வள்ளிசமேதா
அன்பன் பாண்டியன் நாதா
ஆதாரம் நீதாற
அப்பனே சுப்றமணியே (செ) (14)

தேன்றுளிக்கு வண்டின்கண்—என்ற மெட்டு.

கங்கையோடுயர் திங்களணி சங்கரனின்
செங்கைமேவிய தங்கவடிவேலவனே
மங்கை வள்ளிய ணங்கையையபுணர்
மாதவனை சோதனை செய்
யாதெனையாழ் நீதவனே (௧)

எங்குங்கார்சூழ்ந் திலங்கிச் சங்கமர்கள்
தங்குஞ்செந் திலம்பதியி லுருஞ் சண்முகனே
சங்கீதக்கவிச் சபமலர்தனை
சாற்றி உனைப்போற்றினேன் காப்
பாற்றியருளேற்றிடுவாய் (௧)

சூரனைவென்ற சுப்பய்யனே இப்பயெனக்
கார்துணைதி நீயலாது வேறுகதி
பாரய்யாபெனக் காரய்யா இந்தப்
படுநரகின் கொடுவழிவிட்
டடுமையை நல்லிடமதில் சேர் (௧)

திருமாமயில்வீறு நற்கருணை தாரும் சம்போசிவசர
வணனே— திருவுருவே
வீரனம்மமுக்காசான் பொன்னடி—
வேண்டிடு நற்பாண்டியனை
ஆண்டிடுவேலாண்டியே நீ (௧) (15)

செயசெயபூலிங்க—என்ற மெட்டு

பல்லவி

நயபுரிவாயே சிவசண்முகனே கன

அனுபல்லவி

அயருதே எனதிருதய முன்னத்தேதடி
ஆடு மயில்மீதேறி அடியேன் முன்னாடி (அ)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183532
2.6.47
1922

கயல்விழி வள்ளிக்கேற்ற கணவனே செந்தூர்
கந்தசாமியே எனை இந்தவேளையில் வந்தாள்

தொகையறு

செயகால மெனமங்கை மயலாலேமதிகெட்டு
தெய்வமே உன் கைவிட்டு
துயராலே நலிவுற்று செயலிலா கெதிபட்டு
சுவாமி போதிந்தமட்டு

பாட்டு

கங்காதரன் குமரு கரிமுகன்சோதரா
கார்த்தருள்வாய் மனபூர்த்தியாப்க் கோதரு

தொகையறு

பாங்கானகிறவுஞ்சனுடல் கிழிவிவேலே
பக்தரைக் காற்கவிலேயா
தீங்கொன்றுமரியாத யேளையெனைக்கார்த்திட
தெய்வமே யென்ன மலேயா

பாட்டு

பரனே பன்னீர்கரனே பரங்குன்றுத்தூரனே
பாண்டியதாஸனையே ஆண்ட ஒப்பாரனே (தய) (16)

பியாரி தோரி பியாரி ஜான்—என்ற இந்துஸ்தான் மெட்டு

பல்லவி

அம்பிகை திருப்பாலனே அன்னைகுஞ்சரி லோலனே

அனுபல்லவி

தும்பிமுகவனுக்கிளைய துணைவனே
துடிக்கச்சூரறை மடித்தகுணவனே
கும்பிட்டேன் திருமாலின் மருகனே
குமருசரவண பவனிமுருகனே (அ)

நம்பினோர்க் கருள்புரியும் நீதனே
நாதனுக்குபதேச போதனே.
அன்பிலாதவன் யானோ நாதனே
அடியேன் மீதினிலேதிச்சோதனை (அ)

கெஜல்

துரையே தாராதலத்துரையேனு னேனெனில்
சூழ்ந்தது கொடியதுன்பம்
துரையே என்னகத்துரை யேதுவாய்க்கொண்டென்
துயரகற்றிடுவதென்றோ

பாட்டு

மாநிலம்புகழ் ஆதிதேவாமானுவர்சொல் மகானுபாவா
கானில் வேடுவரூபமானவா கருணைவைத்தெனைக் காற்கவாவா
(அ)

கெஜல்

மாறாத தூக்கமா வயிறுக்கிய தீர்க்கமா
மாதவச் செருக்கதாமா
தீறுதவினை தீற்கும் வெற்றிமயில் வாகனு
தெய்வமே வெறுர்கலாமா

பாட்டு

ஞானகுரு முனிக்குபதேசித்தவா
நானிலத்தவர்க்கருள் பாலித்தவா
மானின்குட்டியால் மரமாய் நின்றவா
மதனைபாண்டியன் குறைதவிர்த்தவா (அ) (17)

செந்தில்க்குமரவேல்—என்ற மெட்டு.

பல்லவி

கந்தன் துணை நமக்குண்டு—கழுகுமலை
கந்தன் துணை நமக்குண்டு

அநுபல்லவி

காரிருள்போல் வளர்ந்தே வருசூரனை கூர்வடி
வேலினல் வேறர வீசியே (கந்)
கனத்தவேடுவ குலத்தொருத்தியை
மனம்திருத்தியே மணம்பொருத்திய (கந்)
காசினியோர்க்கருள்பாலித்திட ஒரு
மாசிலா வடிவொடு மயில் மீதேவரு (கந்)
கடம்பணிந்தவன் கலியுகமதில் நல
திடம்பொருந்திய புயவலியொடுசில
அடப்புரிந்தவர் குடிகெடுத்திடுபவன்
தடம்பொருந்திய கிரிநொடி வலம்வரும் (கந்)
கடகரிமுகவனுக்கிளையவனும்பால்
கடல்துயில் வண்ணன் மருகனுமாகிய (கந்)
கண்டுநிகறக்ககவி செப்பிடுபாண்டியன்
தொண்டுபுரிந்திடு சற்குருவாகிய (கந்) (18)

இன்னமேன்ன தூக்கமா—என்ற மெட்டு

வன்னமயில் வாகனு—குற—
வள்ளிமகிழ் மோகனு—திரு
வாலையம்பிகை பாலனே மலர்க்காலனே—எனை
வந்தாளும் வேலவனே
யேழைமுகம்பாரையா—புவி
கோழையறுத்தாளையா—சம்போ
யேதுயித்தனை வாதுயான் செய்ததீதகற்றிபொற்
பாதம் தந்தருள்வாய்
சூரனை வென்றவனே—செந்தூர்
சுப்பயனே குகனே—திட

சூரா மாமயில்வீரா மென்துயர்தீரு
நல்லுப காரஞ்செய்பரனே
வேண்டி உனதடியே—துதித்திடும்
பாண்டிய கின்னடியே—பாட
வேறுசிந்தனைமீறிடாதெனைக்—காருஞ்
சிற்பர ஆருமாமுகனே (வள்) (19)

பாண்டியனீன்ற மீனாக்ஷி—என்ற மெட்டு.

பல்லவி

சங்கரனீன்ற சர்வேசா—சுழுகா
சலக்குமரேசா

அநுபல்லவி

மங்கைதெய்வானை மகிழ்நேசா—மௌன
மந்திர உபதேசா— (ச)

தொகையறு

ஐங்கரன் சகோதரு ஆங்காரமயவீரு
அப்பனே சுப்ரமண்யா
செங்கை வேலாயுதத்தெய்வமே என்னகத்
திருளகற்றிடுவதன்றோ

பாட்டு

தேடினேன் திருச்செந்தூர் வாசா
திகழ்கடம்பூவணியீசா
பாடினேன் பாண்டியதாஸன்—நின்
பாதம் பணிந்திடும் வாசன் (20)

ஆண்டிப் பண்டாரம்—என்ற மெட்டு.

பல்லவி.

வேல் முருகோனே திருமால் மருகோனே
செங்கதிர் வேல்

அநுபல்லவி.

பால்ய வசிகரனே பரனே பன்னீர்கரனே
மேல்வாசியான தேவர் வேதை தவிழ் தாண்டவனே (வே)
நால்வேதமும் புகழும் நாதா தயாபரா—என்
பால்வரத் தாமிதமேன் பங்கய னீன்ற சத்தி (வே)
உன்னையல்லா தெனக்கு உதவி செய்வாருளரோ
அன்னை வள்ளி சமேதா அய்யா ஆனந்த வடி (வே)
என்னை யாதரிப்பது நீ யில்லா லிப்பூவுலகில்
பின்னையரார் பாண்டிய தாஸ்
பேசும் பிரகாச சுடர் (வே) (21)

பாரீஸ் பர்மா சைனு ஜர்மேன்—என்ற மெட்டு.

பல்லவி.

கந்தா நந்தா சிந்தா—செந்தூர்க்
கரசனே குமரேசனே

அநுபல்லவி.

இந்தா வென்றே வரந்தா எங்கும் நிரைந்தோரன்மைந்தா
ஏழைக்குன்னிரு தாளைத் தந்தருள்
நாளைப் போக்காதே தாழைப் பூக்கமழ் (கந்)
அந்தோ நொந்தே னெந்தாபந்தீ
ரய்யனே முருகய்யனே

சந்தா சலாதிபரா சமரா சூர சம்மாரா
சம் தரிகிட நம்மென வரு
அம் மயில் மீது லுங் குரு பர (கந்)

வேலா கோல கலமான வேதனுக் குபதேசனே
மூலா தரப் பொருளே
முருகா வர மருளே
மூழும் என் வினை கோழருத்தெனை
ஆளும் பூவளம் சூழ் பரங்கிரி (கந்)
ஆல முண்ட நீல கண்டன் பாலனே அநு கூலனே
சீலனம்மமுத்திரு சீர்பதத்தைச் சிரம் கொள்
சிஷன் பாண்டிய தாஸனுக்கருள்
ஈசனே வள்ளி நேசனே சிவ (கந்) (22)

சிந்து.

செந்தி நகர் வந்த வடி வேலா—அரண்
தேவி சிவகாமி யருள் பாலா வாசச்
செங்களபக் கொங்கை வள்ளி லோலா—சாமி
தினமென திரு தயம்புரி பவ
மர அருள் சரவண பவ வென
செப்புமடியார்க்குதவுஞ் சீலா—ரத்னச்
செஞ் சதங் கைத் தண்டை யணிகாலா (செ)

சந்ததமு உந்தனையே தேடி—யானுந்
தட்டலைந்து கெட்டு உடல் வாடிப்படுஞ்
சஞ்சலத்தைத் தீற்றிடவர் ஓடி—அய்யா
சதமென உனை நிதம் பணி யெனை
கன துயருர செயு மனதென

தந்த தன தான வென கோடி—தமிழ்
சாற்றியும் பல னிலேயே பாடி (செ)

தங்கு திரு மங்கள சிங்காரா—நல்ல
சாதி மயில் மீதுறும் ஒய்யாரா தேவர்
சங்கடங்கள் தீர்த்த வுபகாரா—நல்ல
தடவரை நிகர்புய அசுரர்கள்
பொடிபட அமர்புரி குருபர
சருவசன ரட்சக கெம்பீரா—இன்னந்
தயவிலேயோ ஏழையைக் கண்பாராய் (செ)

சங்கையுர வெங்கும் பிரகாசன்—தமிழ்
சங்கம் புகழ் அம்மமுத்து சீஷன் கவி
சாற்றிடும் நற் பாண்டியெனுந் தாஸன்—பாடும்
சத பத மதை நிதம் சொலி துதி
செயுமடியவரடி முடியுர
தாங்கித் துதி பண்ணு விசு வாசன்—வள்ளி
தத்தை மொழி சித்தம் மகிழ் நேசன் (செ) (23)

தாதாபாய்—என்ற மெட்டு.

பல்லவி.

தாதா நின் தயவெனும் பொருள்
தந்தேன் வந்தனம் கந்தப்பா தினம் (தா)

அநுபல்லவி.

ஏழை நான் செய்த குற்றம்
எல்லாம் பொருத்துன் சித்தம்
இரங்கவேண்டியே கரங் குவித்தனன்
அறந்தங்குந் திருப்பரங் குன்றத்தோனே (தா)

கெஸல்.

ஈசனுக் குபதேச ஞான குமரேசனே
யான் செய்த குற்ற மதனை
யெல்லாம் பொருத்துனக் குள்ளாளாய்க்
கொள்ள நின்—இருதாளைப் பற்றினேனே.

பாட்டு.

அரியாது செய்த பிழை
அய்யா பொருக் தருளே
ஆசனேதர சீசன் பாண்டிய
தாஸனின்னுரை பேசினேனருள் (தா) 24

அம்பலத்திலாடி வந்தேனே—என—மெட்டு.

ஆடுமயிலேரி வருவா அறுமுகவா (ஆ)
நீடூழிகாலமு நான்
நீங்காதுனைத் துதித்து
பாடும்படியருளியவா பார்புகழ்தேவா (ஆ)
தேடுமுனதடியேன் சிந்தனையை நீக்கிட
வேடுவரூபமானவா விமலதேவா (ஆ)
குருமுனிக்குபதேசித்த குகனே சூரசம்மாரா
வறுமையகற்ற வருவாய் வாகாயென்தேவா (ஆ)
மருவிலா மலர்ப்பாதா மாதுவள்ளி சமேதா
குருவேயெனக்கருள்தாதா குஞ்சரிநாதா (ஆ)
தந்தைதாய் நீயல்லாது தனையனுக்கு வேறேது
இந்த வேளையிலென்மீது ஈசாயேன் வாது (ஆ)
எந்தநேரமு உன்மேல் சிந்து பசனை புரி
மைந்தன் பாண்டியதாஸ்பணிமா சுப்ரமணி (ஆ)

கண்ணாயிரம்படைத்த—என்ற—மெட்டு.

மாலோடயன் வகுத்த காலன்றனையுதைத்த
மடமயிலிட முருவிடவரவணிந்தவன்—பாலனே—புவி
தட வரைபொடிபட
நடமயில் கடவிய வேலனே (மா)

வானோர்புகழ் திருவே ஞானமூலக்குருவே
வரமதுதாகரி அரகரமுருகனேவாருமே—சிவ
சரவணபவாமென திருதயமுருகுதாருமே (மா)

செந்தாமரைப் பாதத்தைத் தந்தாள்வா
தாதித்தித்தை திரிகிடணம் திரிசேகிட
தோமென—தாளமேயெங்கும் திருகதிர்
வேலனே சுருதிகள்பாடும் எக்காழமே (மா)

எண்டிசையும் புகழும் மண்டலமும் மகிழும்
இகபரா என திருகய முருவினையறபாருமேசாமி
இத்தினம் பாண்டியன் வித்துவன்கவிதுரை தீருமே (மா) 26

லாவணி மெட்டு.

தடவரைபொடிபட நடமயில்கடவிய
சாமி சண்முக நாதா—நீன்
தூயவருள்பெரவெண்ணும் தனையனைக்காராவிடில்
தரணி நகைத்திடாதா. (தட)

வடவரைநடிங்கிட ரிடபமீதேவரு
வரனருளிய பாலா—நின்
வருமையகலவரமருள இதுசமயம்
வாதுயேன் வடிவேலா. (தட)

திடபுய அசுரர் சங்கடமதால் வருந்திய
தேவரைக்காற்கலையா—இந்தச்
சிறுவன்றுயரகற்றி மறுவிலாதாள்கொள்ள
தெய்வமேயென்ன மலையா

கடகரிமுகவனோடிலகிய இளையசெங்
கதிர்வடிவேல் முருகா—நின்
கவியுரைபாண்டிய காஸனை யாளுமெய்க்
கடவுளே அரிமருகா. 27

---

சூரகுலசம்மாரா—என்ற மெட்டு.

மால்மருகனே மயூரா—திரு
மாதுவள்ளி மகிழ்மாரா
வாராய் காராய் மாதீரா

வேல்முருகனே வித்தாரா—அதி
வீரசூர சங்காரா
வேதா நாதா போதா

கஸல்.

பாலாபிஷேகா பரமாவிசாகா
பாவைதெய்வானைமோகா
நாலாவிதத்திலும் மேலானவாதாவா
நவில்வதழகல்லவாவா

நாதனுக்குபதேசா—உனை
நம்பினேன் குமரேசா
ராஜா வாசா ஈசா

பாதகெதரிசனம் தாரும்—பாண்டிய
தாசனின் குறைதீரும்
பாவா தேவா வாவா. (மால்) 28

---

அடுக்குமல்லிகை தொடுக்குமெத்தையிலே — என்ற-மெட்டு.

நாடகத்தனுபோகமுற்றவரே— நற்றமிழரிந்த
நாவலர் புலவோர் பெரியவரே — தமிழ்
நாட்டிலே மஹான்
மேட்டிமை பெற
நாட்டிய தமிழ்
கேட்டேனவ்விதம்

பாடவென்மன தெண்ணிபகாலே— என் குருவிடத்தே
பணிந்துகேட்டேனென் மனம்போலே — ஞான
பண்டிதனருள்
கொண்டிடும்படி
கண்டமிழிகை
விண்டிடும்வகை

ஒதினுரென் குருகலைக்கியானி உபதேசம்பெற்று
உரைத்தேன் கலைகள் உணர்ந்த மெஞ்ஞானி—பிழை
யுற்றபோதிலும்
நற்றவத்தினுல்
பெற்ற மைந்தனின்
உற்றபாலனுய்

பாதுகாற்கவேண்டி மன்ருடி பலகாலும் போற்றி
பணிந்துசெய்தேன் சாஞெரு கோடி— கன
பாசமாய்த்தங்கள் நேசன் பாண்டிய
தாஸனுக்கருளாசிகூறுவீர் (நாட) 29

ஏறுமயிலேறி விளையாடும்—என்ற

திருப்புகழ் மெட்டு.

குருமுனிக்குபதேச னானகுகநாதா
குழந்தைவடிவேலான குமரகுருநாதா
அறுமுகத்தவதார மானநவநீதா
அருணைகிரி செந்தமிழை ஆய்ந்த மலர்ப்பாதா
மருவிலாதுருவான வள்ளிமகிழ்நாதா
மயிலேறிக்கிரிவலமாய் வந்த மறைவேதா
திருஞானசம்பந்த ஞானசங்கீதா
திருச்செந்திலம்பதி லமர்ந்தமுருகோனே. 30

---

## வாழி விருத்தம்.

கதிபெருகுங் கீர்த்தனையை அச்சிலிடப் பொருள்தந்த
கனவா னென்னும்
நிதிபெருகு ராமசாமிக்குரிசில் மக்களொடு
சம்பத்தும் நிதமும் வாழி
மதிபெருகுங் கீர்த்தனையை வாசிப்போர்
வாசிக்கக் கேட்டவரும் வாழி வாழி
துதிபெருகுமென்னாசான் யானுமிந்தக் கீர்த்தனையும்
தொல்லுலகும் வாழியாமே.

முற்றிற்று.

@26:47
N22
தமிழ்நாடு
183532

இந்தப் புஸ்தகத்தின் இரண்டாம் பாகம்

கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.